# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

---

(2002, யூலை மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, யூலை மாதம் 12 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக** வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

[2002 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. — ஒ 19/2002
4684

**2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற நிதியாண்டுக்காகக் குறித்தசில நிதிசார் உத்தேசங்களுக்கும் ஏனைய கருமங்களுக்கும் சட்டவலு கொடுப்பதற்கவசியமான சட்ட ஏற்பாடுகளைச் சட்டமாக்குவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

**துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டை விதித்தல்**

இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான அறவீடு.

2. ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைக்கு வெளியில் தோற்றுவாய் கொண்டதும், இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படுகின்றதுமான ஒவ்வொரு பொருளின் மீதும், அப்பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி, கப்பற் கட்டணப் பெறுமதி என்பவற்றின்மீது ஒரு சதவீதமென்ற வீதத்தில் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு என அழைக்கப்பட வேண்டிய அறவீடொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

அறவீடானது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல்.

3. இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் பொருளொன்றின்மீது 2 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு, அப்பொருள் இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் அப்பொருளை இறக்குமதி செய்யும் ஆளினால் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அறவீடானது செலுத்தப்படுவதன்மேல், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி அறவீடாகப் பெறப்படும் தொகையைக் குறித்துரைத்து அப்பொருள் தொடர்பான இறக்குமதி அனுப்பு பொருட் பட்டியல்மீது புறக்குறிப்பொன்று இடச் செய்வித்தலும் வேண்டும்.

குறித்தசில பொருட் கொள்வனவு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டவை எனக் கருதப்படும்.

**4.** இலங்கைக்கு வெளியில் தோற்றுவாய் கொண்டதும் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படுகின்றதுமான ஏதேனும் பொருள் —

(அ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் செலுத்தப் படற்பாலதான அல்லது செலுத்தப்படற்பாலதெனக் கருதப்படுவதான ஏதேனும் சுங்கத் தீர்வையை, மிகைக் கட்டணத்தை அல்லது வேறு அறவீட்டை அறவிடுவதற்காக அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏதேனும் மீறுகைக்காகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விற்கப்படுமிடத்து ;

(ஆ) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் கீழான எவையேனும் வருமதிகளை அறவிடுவதற்காக, அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் விற்கப்படுமிடத்து; அல்லது

(இ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதி பதியினால் நிருவகிக்கப்படும் எவையேனும் வரிகளுக்காக, அவரினால் விற்கப்படுமிடத்து,

அப்பொருளின் கொள்வனவுகாரர், 3 ஆம் பிரிவின் நோக்கங் களுக்காக அப்பொருளை இறக்குமதி செய்யும் ஆளெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அவருக்கு ஏற்புடைய னவாதலும் வேண்டும்.

விலக்களிப்புகள்.

**5.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் அரசின் தூதுக் குழுவினால் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பினால் ஏதேனும் சேவை வழங்கப்படுவது தொடர்பில் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் பொருளுக்கு 2 ஆம் பிரிவிலுள்ளதெதுவும் ஏற்புடையதாதலாகாது.

6. அறவீட்டை அறவிடும் நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அறவீடானது சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான சுங்கத் தீர்வையொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும். அறவீடானது அறவிடப்படுவதற்கு சுங்கக் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாதல்.

7. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, அறவீடாக இப்பாகத்தின்கீழ் அவரினால் அறவிடப்படும் எல்லாப் பணத் தொகைகளையும் திரட்டு நிதியத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அறவீடாக அறவிடப்பட்ட தொகை, திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல்.

8. இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, "பொருள்" என்பது, எவையேனும் பண்டங்கள், ஆக்கப்பொருட்கூறுகள், எவையேனும் கமத்தொழில் அல்லது தோட்ட வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்கள் என்று பொருளாகும். ஆனால் செயன்முறைக்குட்படுத்தி மீள ஏற்றுமதி செய்வதற்கான நோக்கத்துக்காக இறக்குமதி செய்யப்படும் வைரக்கற்கள், இரத்தினக்கற்கள், தங்கம், ஆபரணங்கள் மற்றும் இலத்திரனியற் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்காது. பொருள் கோடல்.

9. இச்சட்டத்தின் பாகம் 1, எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 மே 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

10. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 2002 மே 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது, பொருளொன்றை இறக்குமதி செய்யும் ஆளொருவரிடமிருந்து அத்தகைய பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி, கப்பற்கட்டணப் பெறுமதி மீது ஒரு சதவீதத்துக்குச் சமமானவொரு தொகையைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பானது, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியுள்ளதாகச் செய்யப்பட்டிருப்பதாகவும், செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றார். செல்லுபடியாக்குதல்.

## பாகம் II

### 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்துக்கான திருத்தம்

*1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, "இரண்டாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறாக, ஏதேனும் சூதாட்டத் தொழிலானது" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ளவாறான ஏதேனும் தொழில்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின்கீழ் விதிப்பனவை செலுத்துவதற்கு ஆளாகும் ஒருவர்," என்ற சொற்களுக்குப் பதிலாக "2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனு மாண்டிற்கென இச்சட்டத்தின் கீழ் விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளாகும் ஒருவர்," என்ற சொற்க ளையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1அ) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டிற்காக இச்சட்டத்தின்கீழான விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஒருவர், அவ்வாண்டின் முறையே ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் சனவரி ஆகிய மாதங்களின் முதலாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், நான்கு சமமான தவணைக் கட்டணங்களில் அந்த விதிப்பனவை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும். விதிப்பனவைக் கொடுப்பனவு செய்யும்

நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதி, அந்த விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஒருவருக்கு அடையாளமறி இலக்கமொன்றை வழங்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற ஆண்டுக்காக எவரேனுமாளினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு, அவ்வாண்டின் முறையே யூலை, ஒற்றோபர், சனவரி ஆகிய மாதங்களின் முதலாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் மூன்று சமமான தவணைக் கட்டணங்களில் அவ்வாளினாற் செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும், அத்தகைய ஏதேனும் ஆண்டின் ஏப்பிறல் முதலாம் நாளுக்குப் பின்னர் 2 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தத் தொடங்குகின்ற ஆளொருவர், அவ்வாண்டுக்காக இச்சட்டத்தின்கீழ் செலுத்துவதற்கு அவர் ஆளாகவுள்ள விதிப்பனவை, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்திற்கொண்டு, ஆணையாளர் தலைமையதிபதி நியாயமானவையெனக் கொள்ளக் கூடியவாறாக நான்குக்கு மேற்படாத அத்தகைய எண்ணிக்கையினவான தவணைக்கட்டணங்களிலும், அத்தகைய தேதிகளிலும் செலுத்துதல் வேண்டும்;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின்கீழ்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(6) விதிப்பனவின் ஏதேனும் தவணைக் கட்டணம் தவணை தவறப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, தவணை தவறப்பட்ட தவணைக் கட்டணம்

பற்றிய விபரங்களையும் தவணை தவறியவரின் பெயரையும் கொண்டுள்ள சான்றிதழொன்றைப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு வழங்கலாமென்பதுடன், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அது கிடைக்கப் பெற்றதன்மேல், அத்தகைய சான்றிதழிற் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய இடத்தில், விடயத்துக்கேற்ப, குதிரைப்பந்தய பணயத் தொழிலை அல்லது சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதிலிருந்து தவணை தவறியவரை நிறுத்துவதற்கவசியமான அத்தகைய வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணையின் பாகம் 1 இல் –

(அ) "2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஆண்டுக்கு" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;" அத்துடன்

(ஆ) அப்பாகத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

"2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்,

தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்துப்படுமிடத்து

ஐந்து இலட்சம் ரூபா

தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதுள்ளவிடத்து

பத்தாயிரம் ரூபா"

அத்துடன் ;

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல் —

(அ) "2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஆண்டுக்கு" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பாகத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்

ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா.".

**14.** இச்சட்டத்தின் பாகம் 11, எல்லா நோக்கங்களுக்காகவும், 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

## பாகம் III

### 2002 மே 1 ஆம் தேதியிலிருந்து குறித்த சில முத்திரைத் தீர்வை அறவீடுகளை இல்லாதொழித்தல்

*சாதனங்கள், ஆவணங்கள் என்பவை மீதான முத்திரைத் தீர்வையை இல்லாதொழித்தல்.*

**15.** இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வைச் சட்டத்தின்கீழ், இப்பாகத்தின் ஏற்பாடுகள் வலுவுக்கு வருகின்ற தேதியன்று அல்லது அதன்பின்னர் எழுதிநிறைவேற்றப்படும் ஏதேனும் சாதனத்தின்மீது அல்லது முன்வைக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஏதேனும் ஆவணத்தின்மீது, முத்திரைத்தீர்வையெதுவும் விதிக்கப்படுதலோ அல்லது செலுத்தப்படுதலோ ஆகாது.

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**16.** இச்சட்டத்தின் பாகம் III, எல்லா நோக்கங்களுக்காகவும், 2002 மே 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*மீளளிப்பு.*

**17.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு மே 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் முத்திரைத்தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எவரேனுமாள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் எழுதிநிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் தொடர்பில் அல்லது முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஏதேனும் ஆவணம் தொடர்பில் அத்தகைய முத்திரைத்தீர்வையை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமிடத்து, அதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது முத்திரைத்தீர்வையாக அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகையின் மீளளிப்புக்கு அத்தகைய ஆள் உரித்துடையவராதல் வேண்டும்.

*ஐயங்களைத் தவிர்த்தல்.*

**18.** இப்பாகத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சாதனத்தின்மீது அல்லது ஆவணத்தின்மீது ஏதேனும் முத்திரைத்தீர்வையை விதித்து அறவிடுவதற்கு ஏதேனும் மாகாணசபைக்குள்ள தத்துவங்களை மதிப்புக் குறைத்தலாகாதென ஐயங்களைத் தவிர்ப்பதற்காக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

## பாகம் IV

### 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்துக்கான திருத்தம்

19. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்திமூன்றாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் VI இத்தால் நீக்கப்படுகின்றது. 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் பாகம் VI ஐ நீக்குதல்.

20. இச்சட்டத்தின் பாகம் IV, எல்லா நோக்கங்களுக்காகவும், 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

## பாகம் V

### 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்துக்கான திருத்தம்

21. இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 2001 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:– 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் அ என்னும் விடயத்தின் (ஒ) என்னும் பந்தியின் (xiஈ) என்னும் உட்பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:–

"(xiஈ) 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், இலங்கைக்கு வெளியேயுள்ள இனங்காணப்பட்ட ஒரு வாடிக்கையாளருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குப் பிரத்தியேகமாக வாடிக்கையாளர் ஆதாரச் சேவைகளை வழங்குவதற்கெனத் தொழில்முயற்சியொன்றினால் இணையத்தின் ஊடாக அல்லது தொலைபேசியின் ஊடாக வழங்கப்படும் அத்தகைய சேவைகள் ; அவற்றுக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் ஒரு வங்கியினூடாகப் பெறப்படுகின்றது ;

(2) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில் "வான்போக்கு எரிபொருளின் பெறுமதி" என்ற சொற்களுக்குப் பதிலாக "வான்போக்கு எரிபொருளின் பெறுமதி" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

(சு) இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் துணிவகையிலிருந்து ஏற்றுமதிக்காக ஆளொருவரினால் உற்பத்திசெய்யப்படுகின்ற ஒவ்வொரு தைத்த ஆடை தொடர்பிலும் இருபத்தைந்து ரூபா பணத்தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளவிடத்தும், உள்ளூரில் விற்பதற்காக அனுமதிக்கப்படுகின்றவாறான தைத்த ஆடைகளின் அத்தகைய வீதத்தின் விற்பனையிலிருந்தும் பெறப்படும் வருமபடிகள்; ".

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**22.** இச்சட்டத்தின் பாகம் V, எல்லா நோக்கங்களுக்காகவும், 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்துக்கான திருத்தம்

*1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** (1) இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும் 2000 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட எல்லாப் பண்டங்களும் தீர்வைவிதிக்கப்படற்பாலவையும் சுங்கத்தீர்வைக்கு உட்பட்டவையும் என்றாற்போன்று இறுக்கப்படுதலும், அறவிடப்படுதலும், சேகரிக்கப்படுதலும் வேண்டும்." என்ற சொற்களிலிருந்து "ஆயினும், எவ்வாறாயினும் உற்பத்தியின் நோக்கங்களுக்கென" என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:—

"இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட எல்லாப் பண்டங்களும் தீர்வை விதிக்கப்படற்பாலவையும் சுங்கத் தீர்வைக்கு உட்பட்டவையும் என்றாற்போன்று இறுக்கப்படுதலும், அறவிடப்படுதலும், சேகரிக்கப்படுதலும் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், பின்வருவனவற்றின்மீது வரியெதுவும் விதிக்கப்படுதலாகாது :–

(அ) சுங்க பிணையத்தின் இடப்பரப்பினுள் வருகின்ற எவையேனும் பண்டங்கள் ; அல்லது

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்கீழ் ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்வதற்காக அல்லது ஏற்றுமதி செய்வதற்கெனத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காக வேறெவரேனுமாளுக்கு, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன், பெறுமதிச் சேர்க்கையுடனோ அதுவின்றியோ அத்தகைய துணிவகையின் கைமாற்றத்தின்மீது அத்தகைய உடன்படிக்கையைச் செய்துள்ள எவரேனுமாளினால் ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்கென இறக்குமதிசெய்யப்படும் ஏதேனும் துணிவகை ;

(இ) இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வேறு தைத்த ஆடைகளின் உற்பத்தியாளர்களினூடாக ஏற்றுமதி செய்வதற்கென தைத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காக, வியாபார மனையொன்றாக இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்துள்ள எவரேனுமாளினால் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் துணிவகை ; அத்துடன் ஏற்றுமதி செய்வதற்கெனத் தைத்த ஆடைகளை உற்பத்திசெய்யும் நோக்கங்களுக்காகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் அத்தகைய உற்பத்தியாளர்களுக்கு அத்தகைய துணிவகையின் கைமாற்றம்;

(ஈ) அத்தகைய உற்பத்தியின் நோக்கத்துக்காக இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச்சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள எவரேனும் துணிவகை உற்பத்தியாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் துணிவகையின் உற்பத்திக்காகப் பயன்படுத்தபடும் ஏதேனும் நூலிழை அமைப்பு, திரித்த நூல், சாம்பல் நிறத்துணி, செய்துமுடித்த ஆடை, இரசாயனப் பொருட்கள், மற்றும் சாயங்கள் ;

ஆயின், மேலும் உற்பத்தி நோக்கங்களுக்கென".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில் —

(அ) "அல்லது 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பொருட்கள் மீது வருமதியான வரிக்கொடுப்பனவை, அத்தகைய பொருட்களின் இறக்குமதித் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அல்லது 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பொருட்கள் மீது அல்லது துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்ட ஆளொருவரினால் உற்பத்தி செய்யப்பட்ட துணிவகை, அத்தகைய உடன்படிக்கையின்கீழ் ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்வதற்காக இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டவரும் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட துணிவகையை ஏற்றுமதிக்கெனத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்து

கின்றவருமான வேறோராளினால் செய்யப்பட்ட ஏதேனும் கொள்வனவின்மீது வருமதியான வரிக்கொடுப்பனவை அத்தகைய பொருட்களின் இறக்குமதித் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) "அத்தகைய பொருட்களின் இறக்குமதித் தேதியிலிருந்து" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பொருட்களின் இறக்குமதி அல்லது கொள்வனவுத் தேதியிலிருந்து" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

**24.** இரண்டாயிரத்து ஓராம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (II) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(II) இலங்கைக்கு வெளியே ஒன்று அல்லது அதற்கதிகமான அடையாளங்காணப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு, வாடிக்கையாளர் ஆதாரச்சேவைகளை வழங்குவதற்காகப் பிரத்தியேகமாகத் தாபிக்கப்பட்ட தொழில் முயற்சியொன்றினால் இணையத்தின் மூலம் அல்லது தொலைபேசியின் மூலம் 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட அத்தகைய சேவைகள் அதற்கான கொடுப்பனவு ஒரு வங்கியினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டது;".

**25.** 2000 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "வரிசெலுத்துதலும் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின் வருவதனை இடுவதன் மூலமும் :—

"வரி செலுத்துதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் ஏற்றுமதிக்காக தைத்த ஆடைகளின் எவரேனும் உற்பத்தியாளரினால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ், இலங்கை முதலீட்டுச் சபையினால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுவதற்காக அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய நூற்றுவீதத்தினுள்ளான எவையேனும் தைத்த ஆடைகளின் வழங்கலின்மீது வருமதியாகவுள்ள வரித்தொகை, இலங்கையினுள் வழங்கப்படும் அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்காகவும் இருபத்தைந்து ரூபாவாக இருத்தல் வேண்டும்." ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :–

"(இ) இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் உள்ளீட்டு வரியின் மேன்மிகையொன்று உள்ளவிடத்தும், அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி, அட்டவணையின் (XXVII) ஆம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள் அல்லது அட்டவணையின் (XXVIII) ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் விதிக்கப்பட்டவாறு கருத்திட்டச் செயற்பாட்டுக் காலப்பகுதியினுள் அல்லது வர்த்தக நடவடிக்கைகள் தொடங்கும்வரை, இவற்றுள் எது முந்தியதாகவுள்ளதோ அதுவரை, வருமிடத்து ; அல்லது" ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:–

"(6அ) (5) ஆம் உட்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிலும் (II) ஆம் பந்தியிலும் இச்சட்டத்துக்கான அட்டவணையின் (XXVI) ஆம் விடயத்திலும் அடங்கியுள்ள எது எவ்விதமிருப்பினும், உள்ளீட்டுவரிக்கான வரவு, 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மின்சாரச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார

சபையிடமிருந்து மின்சக்தி வழங்கலினால் அத்தகைய மின்சக்தி கொள்வனவு செய்யப்படுமிடத்து, மின்சக்தி விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பதிவுசெய்யப் பட்ட ஆளொருவர் தொடர்பில் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

**26.** இரண்டாயிரத்து ஓராம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை, அவ்வட்டவணையின் (XXVIII) ஆம் விடயத்தின் (அ) என்னும் பந்தியின் (II) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(II) கருத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் விலக்களிக் கப்பட்ட வழங்கல்களை மட்டுமே செய்கின்ற எவரே னுமாளின் விடயத்தில், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 2002 ஆம் ஆண்டு யூன் 30 அன்றுள்ள அல்லது அதற்கு முன்னரான காலப்பகுதியொன்று ; அல்லது".

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**27.** (1) (அ) இச்சட்டத்தின் 25(1) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்படும் திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதி யன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்படும் திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 23 ஆம், 26 ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்கும் அதற்கான அட்டவணைக்கும் செய்யப்படும் திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம். இல.32. திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம். லோட்டஸ்ரோட். கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.